முன்வருபவர்கள், 51 சதவிகித பங்குத் தொகை போட்டால்தான், அவர்களுக்கே அது சொந்தமாக அமைந்து, தொழிலை சிறப்பாகச் செய்து, இலாபத்தை ஈட்டுவதோடு, நாட்டுக்கும் உற்பத்தியைத் தருகிற நற்செயல் நடைபெறும் என்பதால், இந்த நிலையில் இந்தக் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

**112**—

## அரசு இணையதளத்தில் பதிவேற்றம்

***48612—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் தொகுதி, கிளியூர் ஊராட்சி, கிழவிளாங்குளத்தில் வசிக்கும் விவசாயிகளுக்குச் சொந்தமான 100 ஏக்கர் விவசாய நிலத்தை அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சிமாவட்டம், திருவெறும்பூர்வட்டம்(ஊரகம்) நில ஆவணங்கள் முழுமையாக இணையவழிப்படுத்தப்பட்டுள்ளன. அவை, முழுமையாக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, 6–11–2015 ஆம் நாள் முதலே இணையவழிப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

**திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் online–ல் அனைத்தும் பதிவேற்றப்பட்டிருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். பட்டாக்கள் மட்டுமல்ல, அவற்றிற்குரிய சிட்டா அடங்கலும், அதில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் என்பதுதான் விவசாய மக்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. அதையும் சேர்த்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கேள்வி கேட்கும்போது பலபேர் என்னிடம் வந்து Server problem அடிக்கடி ஏற்படுகிறது என்று சொன்னார்கள். நாம் ஏன் online–ல் பதிவேற்றம் செய்கிறோம் என்றால், செய்யும் பணிகள் விரைவாக நடைபெறுவதற்காகதான். அதற்குரிய procedure fast ஆக நடைபெற வேண்டும் என்பதற்காகதான் அதனை பதிவேற்றம் செய்கிறோம். அடிக்கடி Server பல இடங்களில் down ஆகின்ற சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தால், நீங்கள் அதிலும் கவனம் செலுத்த வேண்டும். அது மட்டுமல்லாமல், எங்கள் நவல்பட்டு கிராமத்திற்கு 1987 ஆம் ஆண்டில் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. நவல்பட்டு கிராம சர்வே எண் 350–ல் உள்ள Ceylon Colony, பாரதியார் நகரிலுள்ள மனைகளுக்கு பட்டா அடங்கல் இன்னும் கிடைக்காமலேயே இருக்கின்றன. அரசு அவற்றிலும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று நவல்பட்டு, காவேரி நகரில் 1980 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 200 குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு மக்கள் வசித்துவருகிறார்கள். 1980 ஆம் ஆண்டில் சர்வே எண் 310/6 என்கின்ற எண்ணில் பத்திரப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், 1990 ஆம் ஆண்டில் அதே சர்வே எண்ணை 344/1 என அறிவித்து, அதற்கும் பத்திரப் பதிவு செய்திருப்பதாக அங்கிருக்கின்ற மக்கள் தெரிவிக்கிறார்கள்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** தற்போது Revenue Department–ல் என்ன சொல்கிறார்கள் என்றால், இது அரசாங்கத்திற்குச் சொந்தமான இடம், இதை உடனடியாக

காலி செய்ய வேண்டும் என்று சொல்லி ஒரு notice–ஐ அனுப்பியிருக்கிறார்கள். அங்கிருக்கின்ற மக்கள் பீதியில், மன உளைச்சலில் இருந்துகொண்டிருக்கிறார்கள். So, அதற்கும் தீர்வு காணும்விதமாக நடவடிக்கை எடுப்பீர்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில ஆவணங்களை கணினிப்படுத்தி, அவற்றினை இணையம் மூலமாக பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கவும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசிலேதான் முயற்சி எடுத்து, தமிழ் நிலம் ஊரகம், இணையவழி தமிழ்நிலம், நகர்ப்புறம், இது ஏறத்தாழ நத்தம் நில ஆவணங்கள், நகர நில ஆவணங்கள், இன்றைக்கு முழுமையாக செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் கூறுவதைப்போல technical fault சில இடங்களிலே இருப்பது, தகவல் தொழில்நுட்பத் துறையின் சார்பாக, உடனுக்குடன் சீர்செய்யப்பட்டு வருகின்றது. ஆனால், ஆவணங்களை கணினிமயப்படுத்தி, முழுமையாக ஏறத்தாழ 305 வட்டங்களிலே 302 வட்டங்களுக்கு கணினிமயமாக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, manual ஆக இருந்தவற்றையெல்லாம் இப்போது computerised ஆகக் கொண்டுவந்துவிட்டார்கள். A–Register, சிட்டா, அடங்கல் எல்லாமே கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, technical fault–ஐ வருகிற காலத்திலே சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, சில இடங்களிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதிக்குட்பட்ட அந்த வட்டங்களிலே நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழே சில இடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிகமான நிலங்கள் வைத்திருப்பவர்களிடமிருந்து கையகப்படுத்தப்பட்டு, விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே சில அடமான நிலங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் என்னவென்றால், 20 ஆண்டு காலம் அவர்களுடைய பயன்பாட்டில் வைத்து, முதல் தவணைத் தொகையை அவர்கள் செலுத்தினார்கள் என்றால், F–patta என்று

2020 மார்ச் 17]

கொடுப்பார்கள். பிறகு அந்த F–patta–ஐ உறுதி செய்து, அவர்களுக்கு பட்டா மாற்றம் கணினியில் கொண்டுவந்து, அதற்குப் பிறகுதான் இணையவழியில் கொண்டுவருவோம். அதில் சில பயனாளிகள்— நீங்கள் சொன்னதற்குப் பிறகு, முழு விவரமும் நாங்கள் எடுத்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வேண்டுமானால் நான் நேரில் தருகிறேன். யார், யார் முதல் தவணைத் தொகை செலுத்தாமல் இருக்கிறார்கள் என்ற விவரம் இதில் இருக்கிறது. அவர்களெல்லாம் அந்த முதல் தவணைத் தொகையை செலுத்தினால், அவர்களுக்கு பட்டா உறுதி செய்து, வீடு கட்டியிருந்தால் அல்லது அவர்கள் என்ன பயன்பாட்டில் வைத்திருந்தாலும் அவர்களுக்குக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

**திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்டா, அடங்கல் இந்தப் பிரச்சினை இல்லாமல் துறை சார்ந்த கேள்விதான். நிறைய இடங்களில் பட்டா ஒரு சிலருக்கு மட்டும் வழங்கியிருக்கிறார்கள், ஒரு சிலருக்கு வழங்கப்படாமல் உள்ளது. இதுபோன்று எனது தொகுதியில் பல இடங்களில் இருக்கிறது. உதாரணத்திற்கு மாநகராட்சி 7–வது வார்டில் திருவள்ளுவர் நகர், வண்ணான் படித்துறை, சந்தைப்பேட்டை மலை, அம்மாகுளம், 28–வது வார்டில் சீனிவாச நகர், 30–வது வார்டில் Military colony, தங்கேஸ்வரி நகர், கணேசபுரம், 31–வது வார்டில் பொன்னேரிபுரம், அந்தோணியார்புரம், 36–வது வார்டில் மலையடிவாரம், J.J. Nagar, 61–வது வார்டில் அண்ணா நகர், பாரி நகர், 64–வது வார்டில் வள்ளுவர் நகர், பர்மா காலனி, கூத்தப்பார் பேரூராட்சியில் பாரதிபுரம், கும்பக்குடி ஊராட்சியில் எம்.ஜி.ஆர். நகர், வாளவந்தான்கோட்டையில் குங்குமபுரம், குண்டூர் ஊராட்சியில், பர்மா காலனி, மாரியம்மன் கோவில் தெரு, எழில் நகர் என்ற பகுதியில் கன்னிமார் கோவில் தெருவில் 25 ஆண்டுகளாக வசிக்கின்ற மக்களுக்கு பட்டா வழங்கப்படாமல் உள்ளது. அதேபோன்று துவாக்குடி நகராட்சியில் தெற்கு துவாக்குடி மலை, வடக்கு துவாக்குடி மலை, இராவுத்தான் மேடு, பெல் நகர், இந்திரா நகர், முன்னாள் இராணுவத்தினர் காலனி ஆகிய இடங்களில் முழுமையாக இன்னும் கொடுக்கப்படாமல் உள்ளது. 10 பேருக்கு கொடுத்திருக்கிறார்கள். 30 பேருக்கு கொடுக்கப்படவில்லை. So, இதுமாதிரி பல இடங்களில்

இருக்கின்றது. சில இடங்களில் முழுமையாகக் கொடுக்கப்படாமல் இருக்கின்ற நிலையும் உள்ளது. எனவே, அதையும் அரசு உடனடியாக கவனத்தில் எடுத்துக்கொண்டு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வீட்டுமனைப் பட்டா தொடர்பாக ஒவ்வோர் ஆண்டும் இலக்கு நிர்ணயித்து கொடுத்துக்கொண்டு வருகிறோம். குடியிருப்புகளாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்ற அரசு நிலங்களில் இருப்பவர்களுக்கு பட்டா வழங்குவதற்குத்தான் நாம் One time special scheme என்று சொல்லி, regularisation– வரன்முறைப்படுத்திக் கொடுக்கிறோம். அதற்கு 318 எண்ணிட்ட அரசாணையை வெளியிட்டிருக்கிறோம். ஊரகப் பகுதிகளில் கொடுப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் நிலத்தின் மதிப்பீடு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அதை அரசிற்கு அனுப்ப வேண்டுமென்று சொல்லி, அந்த நடைமுறையைப் பின்பற்றுகிறோம். அதையும் தளர்த்தி, நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சிப் பகுதிகளிலுமே அரசுக்கு அனுப்ப வேண்டாம், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே, நீர்நிலைப் புறம்போக்கு, ஆட்சேபகரம் அல்லாத புறம்போக்காக இருந்து, 5 ஆண்டுகள் தொடர்ந்து, அந்தக் குடியிருப்புகளில் அவர்கள் இருந்தார்களேயானால் அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு அரசாணை எண் 318 வழிவகை செய்கிறது. அந்த அரசாணையில் திருத்தம் செய்து, அதனை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, திரும்ப அது அரசிடம் வந்து, அதனை ஆய்வுசெய்து, திரும்ப மாவட்டத்திற்கு அனுப்புவதற்கு அதிக கால அவகாசம் தேவைப்படுகிற காரணத்தினால், தற்போது அந்த விதிகளைத் தளர்த்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.